DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 173 /2022**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | முருகேஸ்வரி | Husband Name – | லட்சுமணன் |
| Age | 55 | Village – | மல்லிங்காபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வழக்குரை சொத்து மல்லிங்காபுரத்தில் போடி–உத்தமபாளையம் பிரதான சாலையின் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தலைவாசல் மேற்படி சாலையை பார்த்து மேற்கு பக்கமாக உள்ளது என்றால் எனது வீட்டிற்கு இரண்டு தலைவாசல் உள்ளது, ஒன்று மேற்கு பார்த்து உள்ளது, மற்றொன்று தெற்கு பார்த்து உள்ளது. எங்கள் வீட்டின் பிரதான வாசல் எது என்றால் இரண்டு வாசலுமே பிரதான வாசல் தான். எங்கள் வீட்டின் தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் நடைபாதை உள்ளது. மேற்படி நடைபாதை எத்தனை அடி அகலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. தற்போது பிரச்சனை மேற்படி பாதைக்கா அல்லது என்னுடைய வீட்டிற்கா என்றால் இரண்டிற்குமே பிரச்சனை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எத்தனை சொத்துக்களை காண்பித்துள்ளேன் என்றால் பாதைக்காகவும், என்னுடைய வீட்டிற்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், இரண்டையும் வழக்குரை சொத்தாக காண்பித்துள்ளேன். வழக்குரை சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது அம்மா கிரையம் வாங்கி எனக்கு தானமாக கொடுத்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் 3–1/2 செண்ட் படப்படி நிலம் மட்டும் கிரையம் பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் கிழமேல் எத்தனை அடி, தென்வடல் எத்தனை அடி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் அடிப்படையில் எனது தாயார் எங்களுக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அம்மா வாங்கிய கிரைய பத்திரத்திலும், எனது அம்மா எங்களுக்கு எழுதி வைத்த தான பத்திரத்திலும் தெற்கு பக்கத்தில் உள்ள பாதையை தனியாக காண்பித்து எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள பாதையின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் நிலத்திற்கு தெற்கு பக்கமுள்ள மேற்படி பாதையானது போடி–உத்தமபாளையம் பிரதான சாலையில் இருந்து கிழக்கு முகமாக பிரதிவாதி இடத்திற்கு செல்லக்கூடிய ஒரேஒரு பாதை என்றால் சரிதான். பிரதிவாதியின் இடத்திற்கு மேற்படி பாதையை தவிர வேறு பாதை கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்கள் கிரையம்பெற்ற சொத்தை சுற்றி சுற்றுசுவர் அமைத்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்குரை சொத்திற்கு எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் பட்டா வேண்டி விண்ணப்பம் செய்துள்ளோம். நாங்கள் குடியிருக்கும் எங்கள் வீட்டிற்கு மனைவரி பட்டா எண்.909/4C1 என பட்டா ஏற்பட்டுள்ளதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாதையானது சர்வே எண்.909/4C2 என தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு பாதை என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாதை தென்வடல் 12 அடி அகலமும் கிழமேல் 56 அடி நீளமும் உடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வீடு இருக்கும் இடம் சர்வே எண்.909/4C4 என தனியாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களுடைய வீட்டின் தெற்கு பக்க சுவர் மண்சுவரா அல்லது செங்கல் சுவரா என்றால் புகையடி செங்கலால் கட்டப்பட்டது. எங்கள் வீட்டின் தெற்கு சுவற்றின் மேற்கு ஓரத்தில் தகரத்தால் அடைப்பு வைத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி தகரம் வைத்திருப்பதால் பிரதிவாதிகளின் வாகனங்களை கொண்டு செல்வதில் இடைஞ்சல் ஏற்படுகிறது என்றால் சரியல்ல, தற்போதும் வாகனங்கள் போய்கொண்டுதான் இருக்கின்றன. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்உரையில் உள்ள விபரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் பிரதிவாதிகள் எங்கள் வீட்டின் தெற்கு பக்க சுவற்றை

உடைத்து, நாங்கள் பதித்திருந்த குழாய்களையும் உடைத்து எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். மேற்படி விபரங்களை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி ஜெயச்சந்திரன் எங்கள் மீது இரண்டு முறை புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி விசாரணையில் காவல்துறையினர் பிரதிவாதிகளின் வாகனங்கள் கொண்டு செல்வதற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என அறிவுறுத்தினார்களா என்றால் அவ்வாறு அறிவுறுத்தவில்லை. காவல்துறையினர் எங்கள் சொத்தையும் பிரதிவாதிகள் சொத்தையும் அளவையரை வைத்து அளந்துகொள்ளுமாறு சொன்னார்களா என்றால் அவர்கள் சொல்லவில்லை, ஆனால் பிரதிவாதிகள் ஐந்து முறை வந்து அளந்தார்கள். மேற்படி அளவையரை வைத்து அளக்கும் போது 12 அடி அகலப்பாதைக்கு பதிலாக தற்போது 10 அடி பாதைதான் உள்ளது என சொன்னார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அளவை செய்யும்போது நான் இல்லை எனது அம்மா மட்டும் தான் இருந்தார்கள். நிலஅளவுகள் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருவதால் எங்கள் சார்பாக நில அளவையரை வைத்து அளந்து பார்க்க முயற்சி எதுவும் எடுத்தோமா என்றால் எடுக்கவில்லை. காவல்நிலையத்தில் புகார் அளித்து விசாரணை நடந்து கொண்டிருந்தபோது தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மேற்படி பாதையை நாங்கள் பயன்படுத்தக்கூடாது என பிரச்சனை எதுவும் செய்தார்களா என்றால் பிரச்சனை செய்தார்கள், ஆனால் நாங்கள் தற்போது வரை மேற்படி பாதையை பயன்படுத்திவருகிறோம். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது பிரதிவாதிகள் இருவரும் ஆசிரியர் பணி செய்துவந்தார்களா என்றால் இருவரும் தலைமையாசிரியர்களாக இருந்தார்கள். எங்கள் வீட்டிற்கு தெற்கு பக்கமுள்ள பாதையும் அதையொட்டி கிழக்கு பக்கமுள்ள சொத்தும் 1ம் பிரதிவாதியால் 04.02.1992ம் தேதி தனித்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா பாதையும் அதையொட்டி கிழக்கு பக்கமுள்ள சொத்தும் 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டது என்று தெரிந்தும் 2ம் பிரதிவாதியும் அவசியமில்லாமல் நான் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதியும் பிரச்சனை செய்ததால் சேர்த்துள்ளேன். பிரதிவாதிகள் எங்கள் சுவற்றை உடைத்தது சம்மந்தமாக

புகைப்படங்களோ அல்லது வீடியோ ஆதாரங்களோ அல்லது காவல்நிலையத்தில் அளித்த புகாரோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் வீடியோவை கொடுத்துள்ளேன். எங்கள் வீட்டின் தெற்கு பக்கமுள்ள பாதையில் எங்களுக்கு எந்த தனிப்பட்ட உரிமையும் கிடையாது என்றும், எங்கள் வீட்டின் தெற்கு பக்கம் எங்களுக்கு தலைவாசல் இருப்பதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. நான் எனது தாயார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா அல்லது எனது தாயார் எனது பெயரில் எழுதிவைத்த தான பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா அல்லது பட்டாவின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா என்றால் எனது அம்மா எனது பெயரில் எழுதி வைத்த தான பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். எனது பெயரில் தாவா சொத்திற்கு பட்டா உள்ளது என்றும், அந்த பட்டாவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தாவா சொத்தில் எனக்கு உள்ள உரிமையும் அனுபவமும் தெரிந்து விடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களும் என்னுடைய பட்டாவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதால் தாவா சொத்தில் நான் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 முதல் 6 வரையிலான ஆவணங்கள் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கானது என்றும் அதற்கும் தாவா பாதையான சர்வே எண்.909/4C2 க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்கள் அனுபவத்தை யாரும் இடைஞ்சல் செய்யவில்லை என்றும், மாறாக நாங்கள் தான் தாவா பாதையின் பிரதிவாதி அனுபவத்தையும் இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ள அளவு விபரங்கள் தவறு என்பதால் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.25 16:46:59 +0530

District Munsif,
Bodinayakanur.